**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.242/2025**

**நாள் : 13.02.2026**

**ம.சா.** 2 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சரத்பாபு | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.கவுண்டப்பன் | வயது | : | 30 |
| ஊர் | : | குட்டிகவுண்டனூர் | தொழில் | : | டிரைவர் |
| வட்டம் | : | நாட்றம்பள்ளி | தேசியம் | : | இந்தியன் |

நான் மனுதாரர் தரப்பு சாட்சியும், விபத்தை நேரில் கண்ணுற்றவரும் ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

சாட்சியம் அளிக்க எனக்கு அழைப்பாணை வரவில்லை. இறந்துபோனவரின் தம்பியான ஹேமநாத் அழைத்ததன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து சம்பந்தமாக நான் புகார் எதுவும் கொடுக்கவில்லை. விபத்து சம்பந்தமாக பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கில் நான் சாட்சியம் எதுவும் அளிக்கவில்லை. இறந்துபோனவர் எனக்கு பழக்கமானவர் அல்ல. அதேபோல் ஹேமநாத்தும் எனது நண்பர் அல்ல, எனக்கு தெரிந்த நபர் ஆவார். விபத்திற்கு பின்னிட்டுதான் ஹேமநாத்தை எனக்கு தெரியும். நான் விபத்தை நேரில் பார்த்தது பற்றி ஹேமநாத்துக்கு விபத்து நடந்த இடத்தில் இருந்தவர்கள் சொல்ல கேட்டு தெரிந்துகொண்டதாக என்னிடம் சொன்னார். டோல்கேட்–பச்சூர்

செல்லும் ரோட்டில் விபத்து நடந்தது. ஹேமநாத்தின் அண்ணன் இருசக்கர வாகனத்தில் போய்க்கொண்டிருந்தார் அந்த சமயத்தில் பொலிரோ பிக்கப் வாகனமானது பச்சூரிலிருந்து டோல்கேட் நோக்கி வந்தது. விபத்து தேதி ஞாபகமில்லை, விபத்து நடந்து சுமார் 2 ½ வருடம் இருக்கும். விபத்து நடந்தபோது இரவு 7.30 மணி இருக்கும். அப்போது நான் டோல்கேட்டிலிருந்து பச்சூரை நோக்கி போனேன். எனக்கு முன்பாக இருசக்கர வாகனம் சென்றுகொண்டிருந்தது. எனக்கும், இருசக்கர வாகனத்திற்கும் இடையே 80 அடி தூரம் இருக்கும். இருசக்கர வாகனத்தின் பதிவு எண் ஞாபகமில்லை. பொலிரோ பிக்கப் வாகனத்தின் பதிவு எண் தெரியவில்லை. அது AP வகையை சேர்ந்ததாகும். அதன் கலர் வெள்ளை மற்றும் மஞ்சள் ஆகும். இறந்துபோன நபர் சென்ற வாகனத்திற்கு முன்பாக எந்தவொரு வாகனமும் செல்லவில்லை. விபத்து நடந்த நேரம் இரவு என்பதால் பொலிரோ வாகனம் இடித்ததற்கு பின்னிட்டுதான் நான் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். இருசக்கர வாகனத்திற்கு முன்னால் வேறறொரு வாகனம் சென்றுகொண்டிருந்தபோது ஓவர்டேக் செய்ய முற்பட்டபோதுதான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. பொலிரோ பிக்கப் வாகனம் சரியான பாதையில்தான் சென்றுக்கொண்டிருந்தது என்றும், இறந்துபோன நபர் தனக்கு முன்னால் சென்ற வாகனத்தை முந்த முயற்சித்தபோதுதான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்திற்கு அருகில் இடதுபுறமாக அரசு மேல்நிலைப் பள்ளி உள்ளது. வலதுபக்கத்தில் காலி இடமாக இருந்தது. அது நேரான ரோடாகும். அத்துடன் வலது பக்கத்தில் ஒரு ரயில்வே டிராக்கும் உள்ளது. நான் விபத்தை நேரில் பார்க்காததால் இறந்துபோனவர் ஓட்டிச் சென்ற வாகனத்திற்கு முன்னால் மற்றொரு வாகனம் சென்றதை பற்றியும், அதனை இறந்துபோனவர் முந்த முயற்சி செய்ததை பற்றியும் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன நபரை நான் ஆம்புலன்சு வந்தபிறகு ஏற்றி அனுப்பிவைத்தேன்.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.